உ

சிவமயம்

மெய்கண்ட தேவநாயனார்

அருளிச்செய்த

சிவஞான போதம்

யாழ்ப்பாணம்

ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலை,

இலவச வெளியீடு.

பிலவங்க கித்திரை] [10-5-67

ஸ்ரீ காந்தா அச்சக இலவச வெளியீடு எண். 11.

பிகற்பம் - கிதுடைமோ அன்றோ என்னு என்னும் ஐயநினைவு.

நிருவிகற்பம் - ஒரு பொருளின் பெயர் குணம் முதலியவற்றைப் பிரித்தறியாது ஒரு பொருள் தோன்றுகின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே அறிதல்.

விகற்பம்: ஒரு பொருளின் பெயர் குணம் தன்மை செயல் பயன் ஆகிய ஐந்தினையும் ஒத்தறிதல்.

[illegible]

உ

சிவமயம்

மெய்கண்டதேவ நாயனார்

அருளிச்செய்த

சிவஞான போதம்



யாழ்ப்பாணம்

ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலை,

இலவச வெளியீடு எண். 11.


பொது அதிகாரம்
உண்மை அதிகாரம்
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
8
10
12

உ

சிவமயம்

பதிப்புரை

"சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுணல், புலாலுணல், பிறன்மனைவிழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையர்களாய், குருவக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய் விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீபஞ்சாக்ஷரஜபம், சிவத்தியானம், சிவாலயசேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை முதலியவற்றைச் சிவாகம விதிம்படி, மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்கள் என்று சொல்லப்படுவார்கள்." இதை விளக்கஞ்செய்து வாழ்ந்து காட்டியவர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள்.

சைவர்கள் ஓதி, உணர்தற்கு அத்தியாவசியமாய் இருக்கும் நூல்கள், திருமுறைகளும் சைவ சாத்திரங்களுமாம், சைவசாத்திரங்கள் பதினான்கனுள் முதல் நூலாகச் சொல்லப்படுவது மெய்கண்ட தேவநாயனார் அருளிச் செய்த சிவஞானபோதம். சிவஞான சித்தியாரும், சிவஞானமாபாடியமும் இந்நூலின் பெருவிளக்கங்களாய் அமைந்தனவே.

திருவாதவூரர் தம்மையாட்கொண்டருள எழுந்தருளி வந்த சிவபெருமானான பரமாசாரியர் திருக்கரத்தில் புத்தகம் இருப்பதைக் கண்ணுற்று, சுவாமீ! "தேவரீருடைய திருக்கரத்திலுள்ள புத்தகம் என்ன" என்று வினவ, பரமாசாரியர் "பொய்மையிலாச் சிவஞான போதம்" என்றார். இவ்வகையான பெருஞ் சிறப்புக்களையெல்லாம் பொருந்திய நூல் சிவஞானபோதம்.

சைவர்கள் சிவஞானபோதத்தை கற்று உய்தியடைய வேண்டும் என்னும் பேராவலால் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரின் அழைப்பை ஏற்று பாரத நாட்டிலிருந்து ஈழநாட்டிற்கு வருகை தந்துள்ள காஞ்சிபுரம் சைவசித்தாந்தக் கலைச்செல்வர் உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A. L. T. அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் சைவ வளர்ச்சிச் சங்கம் ஆகிய இரு சபைகளினதும் ஆதரவில் 10-5-67 தொடக்கம் 7-6-67 வரையுள்ள நாட்களில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் சைவசித்தாந்த வகுப்பு நடத்துகின்றார்கள், பாடநூலாக சிவஞானபோதம் அமைந்துள்ளது.

இதனை முன்னிட்டு

யாழ்ப்பாணம் ஸ்ரீ கார்த்தா அச்சகம் — புத்தகசாலை

இலவச வெளியீடாக இந்நூல் மலர்கின்றது.

ஸ்ரீ கார்த்தா அச்சகம்-புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

பதிப்பாளர்
10-5-67

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிறப்புப் பாயிரம்

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருள்தீர்ந்
தருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவ நாயனார்

அருளிச்செய்த

சிவஞானபோதம்

பாயிரவியல்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

1. பொதுவதிகாரம்

1. பிரமாணவியல்

முதற் சூத்திரம்

அவன் அவள் அதுவேனும் அவைமு வினைமையிற்
றோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி (என்மனார் புலவர்)

கருத்துரை :

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், சங்கார காரணனையுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

உரைவகை

இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க.

வார்த்திகப் பொழிப்பு —

① முதல் அதிகரணம் —

மேற்கோள் :

ஈண்டு, உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது:

ஏது :

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

உதாரணம் :

பூதாதி ஈறும் முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையின் — ஓதாரோ
ஒன்றொன்றிற் றோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து.

அது (அகம்) அரசுமே உடையது,

1.2 இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது:

ஏது :

இல்லதற்குத் தோற்ற மின்மையின், உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின்.

உதாரணம் :

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தால்
இலயித்த வாறுளதா வேண்டும் — இலயித்த
தத்திதியி லென்னின் அழியா தவையழிவ
தத்திதியும் ஆதியுமாம் அங்கு.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால்-வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத்தான்
கூட்டானே மண்போற் குளிர்ந்து. [கொடுத்துக்

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவன் – ஆக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனின் இற்றின்றாங் கட்டு.

1.3 மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் :

இனிச் சங்காரமே முதலென்றது.

ஏது :

சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

உதாரணம் :

ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவா
றொன்றலா ஒன்றில் அவை ஈறாதல் – ஒன்றலா
ஈறே முதல் அதனின் ஈறலா ஒன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு.

1.3 மற்றிருவரும் வந்தொழிந்த படுவர்கள்.

இரண்டாம் சூத்திரம்

அவையே தானே யாய் இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

கருத்துரை :

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், "புனருற்பவம் வருமாறுணர்த்துதல்" நுதலிற்று.

வார்த்திகம்

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்குமென்றது,

ஏது :

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின், அத்துவித மென்ற சொல்லே அன்னிய நாத்தியை யுணர்த்து மாயிட்டு.

உதாரணம் : 1. அவையேயாய் (அபேதமாய்) நிற்பதற்கு :-

கட்டும் உறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றாங்-கொட்டி
அவன்உளமா கில்லான் உளம்அவனா மாட்டா
தவனுளமாய் அல்லனுமாம் அங்கு.

2. ஒரனேயாய் (பேதமாய்) நிற்பதற்கு :-

ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்-ஒன்றின்றால்
அக்கரங்கள் இன்றாம் அகர உயிரின்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு.

N.B

2. 1. அரன் உயிர்களின் இரண்டாகிற்பன்.

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்னா
தத்துவித மென்றறையும் ஆங்கு.

அரக்கொடு சேர்த்தி யணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று — பிரிப்பின்றித்
தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே யுலகென்பன் இன்று.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வ
னாணையின் வருமென்றது,

ஏது :

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு
அவை அவனதாக்கினை யாகலான்.

உதாரணம் :

உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு.

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே — வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.

2.3 உயிர்கள் அச்சு மாறியே பிறக்கிறே.

மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வருமென்றது.

ஏது :

தோற்றமு மீறும் உள்ளதற் கல்லது உளதாதல் இன்மையான்.

உதாரணம் :

கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற் - கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்.

அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும் — பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்ப
தடாதுள்ளம் போமா றது.

நான்காம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது,

ஏது :

அவன் ஏகானேகம் இரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

உதாரணம் :

எங்குமுளன் என்றளவை ஒன்றன் றிரண்டென்னில்
எங்கு முளனன் றெவற்றெவனும் - அங்கண்
அவையவ னன்றில்லைப் பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை ஆளாம்நாம் அங்கு.

2.4: அரன் சருவ வியாபகன்.

மூன்றும் சூத்திரம்

உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்க மறிதலிற் றண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

கருத்துரை :

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், "ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல்" நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

3.1 முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது,

ஏது :

எவற்றினையும் அன்றன்று என விட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீஅனைத்தும் – நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற்சார்மாயை நீயல்லை
தற்பரமும் அல்லை தனி.

3.2 இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி எனதுடலென்றலின் ஆன்மா உளதென்றது,

என்பதி என்னனை என்ருற் போல, என்கை என் கால்என நிற்பதுளதாகலின், அதுவே அவ் வான்மாவாம் என்றது,

உதாரணம் :

எனதென்ற மாட்டின் எனதலா தென்ரு
துனதலா துன்கைகால் யாக்கை—எனதென்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னிலவை வேருமு உணர்.

3.3 மூன்ரும் அதிகரணம்

மேற்கோள் :

இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுள தென்றது,

ஏது :

ஐம்புலனுகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ்வைந்தினுலும் ஐம்பயனு மறிவதுளதாகலின் அதுவே அவ் வான்மாவாம் என்றது.

உதாரணம் :

ஒன்றறிந்த தொன்றறியா தாகி உடல்மன்னி
அன்றும் புலனுய அஞ்செழுத்தை—ஒன்றறிதல்
உளளதே யாகில் அதுநீ தனித்தனிகண்
டுள்ளலவை யொன்றல்லை ஓர்.

3.4 நான்காம் அதிகரணம்

மேற்கோள் :

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மா உளது என்றது,

ஏது :

நனவின்கண் கனவு கண்டாமென்றும் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாமென்றது.

உதாரணம் :

அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி-அவ்வுடலின
வேருேன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறலுடல் நீயல்லை மற்று.

ஐந்தாம் அதிகரணம்

மேற்கோள் :

இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளது என்றது,

ஏது :

ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பம் சீவனம் பிரகிருதிக் கின்மையின், ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பம் சீவியா நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

கண்டறியும் இவ்வுடலேகாட்டொடுங்கக் காணுதே
உண்டி வினையின்றி உயிர்த்தலாற்—கண்டறியும்
உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா துடல்நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை யூன்.

ஆறும் அதிகரணம்

மேற்கோள் :

இனி, உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது,

ஏது :

அவன் அறிந்தாங் கறிவன் என்றறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அறிந்தும் அறிவதே யாயும் அறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த
தெதுஅறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுவதுதான் என்னும் அகம்.

ஏழாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது,

ஏது :

அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

உதாரணம் :

கலையாதி மண்ணந்தங் காணில்அவை மாயை
நிலையாவாம் தீபமே போல்—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில்அது தனுவாம்
தானத்தின் வேறாகுந் தான்.

2. இலக்கணவியல்

நான்காம் சூத்திரம்

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மரிச் சகசமலத் துணராது
தமைச்சர சேய்ப்படின் றஞ்சவத் தைத்தே
கருத்துரை:

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ வெனின், இதுவுமது,

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள்:

ஈண்டு, இவ்வான்மாவாவது, அந்தக்கரணங்களாயுள்ள மனோ புத்தி யகங்கார சித்தங்களிலொன்றன்றென்றது,

ஏது:

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம்:

மனமாதி யாலுணர்தல் மன்னு புலன்கள்
மனமாதி மன்புலனின் அல்லன் — மனமேல்
உதித்தொன்றை உள்ளம் உணர்தல் அதனில்
உதிக்குங் கடற்றிரையை யொத்து.

சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப் — பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேறும்
அவ்வேறும் போதுபோல் ஆங்கு.

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம்சித்தம் விந்துப் — பகாதிவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் — கண்ணிற்
பகரயன்மா லோடு பரமன் அதிதெய்வம்
அகரஉக ரம்மகரத் தாம்.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வின்றென்றது,

ஏது :

அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலான்.

உதாரணம் :

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணுதேல்
ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய் — வீயாத
உன்னிதனைத் தன்னுள் மறைத்தொன்றுங் காட்
டன்னைமலம் அன்றணைதல் தான். [டம்போல்

மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்தித னாய் நிற்கும் என்றது,

ஏது :

அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினிற்
சென்றணையும் சித்தம் இதயத்து - மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் — இலாடத்தே
அவ்வவ இந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது ஆங்கு.

ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
களந்தறிந்தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

கருத்துரை :

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், "இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகாரம் உணர்த்துதல்" நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.

ஏது :

அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணினல்லது அவை ஒன்றையும் விடயியாவாகலான்.

உதாரணம் :

ஐம்பொறியை ஆண்டங் கரசாய் உளம்நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்-ஐம்பொறியிற்
காணுதேற் காணுது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இதுவுந் தமது முதலாலே உணரும் என்றது.

ஏது :

இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானுந் தன்னை உணராது நிற்றலான்.

மன்னுசிவன் சன்னிதியின் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னுமறையின் இயல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன்சிவன் அசத்தை இன்று.

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவளிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்
கண்டுடனுய் மன்னுதலைக் காண்.

அருளுண்டாம் ஈசற் கதுசத்தி யன்றே
அருளும் அவனன்றி இல்லை—அருளின்
றரனன்றே இல்லை அருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோல் நிற்குமரன் ஏய்ந்து.

திருச்சிற்றம்பலம்.

ஆறுஞ் சூத்திரம்

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின இசைக்குமன் னுலகே.

கருத்துரை :

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், "சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துதல்" நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு, அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்தென்றது,

ஏது :

அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

அசத்தறியாய் கேள்நீ அறிவறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டான் ஆயின் —அசத்தலாய்
நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின் அவை இன்றுமா றொப்பு.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி, வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணரற்பாற்று.

ஏது :

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்க வேண்டுவதின்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசம் இன்மையானும்.

உதாரணம் :

எண்ணிய சத்தன் றசத்தன்றும் என்றுல்லான்
கண்ணி உளதென்றல் மெய்கண்டான்—எண்ணி
அறிய இரண்டாம் அசத்தாதல் சத்தாம்
அறிவறியா மெய்சிவன்தர் ளாம்.

உணர்ப அசத்தாதல் ஒன்றுணரா தொன்றை
உணரும்நீ தானுணரா யாயின்—உணருமுனிற்
றுனிரண்டாம் மெய்கண்டான் தன்னுலுணர் தலாற்
றுனிரண்டாய்க் காணுன் றமி.

பாவகமேல் தானசத்தாம் பாவனு தீதமெனிற்
பாவகமாம் அன்றென்னிற் பாழதுவாம்-பாவகத்தைப்
பாவித்தல் தானென்னிற் பாவகமாம் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

அறிய இரண்டல்லன் ஆங்கறிவு தன்னுல்
அறியப்படான் அறிவி னுள்ளான் — அறிவுக்குக்
காட்டாகி நின்றுனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
அதுவென் றறியறிவு முண்டே — அதுவென்
றறிய இரண்டல்லன் ஆங்கறிவுள் நிற்றல்
அறியுமறி வேசிவமு மாம்.

திருச்சிற்றம்பலம்.

2. உண்மை அதிகாரம்

3. சாதனவியல்

ஏழாம் சூத்திரம்

யாவையும் சூனியம் | சத்தெதி ராகலிற்
சத்தே அறியாத் | தசத்தில் | தறியாத் |
திருதிறன் அறிவுளத் | திரண்டலா வான்மா.

கருத்துரை:

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

* சத்தும் அசத்தும் வரை செய்து ணர்த்துதல்

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப்பிரகாசியா தென்றது.

ஏது :

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்றாம்
அன்னியமி லான்அசத்தைக் காண்குவனேல்-அன்னியமாக்
காணான் அவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணா அசத்தின்மை மற்று.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, அசத்தினுக்கு உணர்வின்று என்றது,

ஏது :

அது தான் நிரூபிக்கில் இன்றாகலான்.

உதாரணம் :

பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றனைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வார் இல்வழியிற் காணும் அசத்தின்மை
கண்டுணர்வார் இல்லதெனக் காண்.

மூன்றும் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இருதிறன் அறிவுள திரண்டலா ஆன்மா என்றது,

ஏது :

இவ்விரண்டினையும் அறிவதாய், உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலும் உளதாயுள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உதாரணம் :

அருவுருவந் தான் அறிதல் ஆயிழையாய் ஆன்மா
அருவுருவம் அன்றாகும் உண்மை – அருவுருவாய்த்
தோன்றியுடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் தொக்கு.

மயக்கம துற்றும் மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசில் – அசத்துமலை
நீயறிந்து செய்வினைகள் நீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமைதான்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண்—மெய்ஞ்ஞானம்
தானே உளஅன்றே தண்கடல்நீர் உப்புப்போல்
தானே உளம்உளவாய்த் தான்.

எட்டாம் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தேனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

கருத்துரை

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல்" நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழும் என்றது.

ஏது :

மேற்சரியை கிரியா யோகங்களைச் செய்துழி, நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.

உதாரணம் :

தவஞ்செய்தார் என்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத் – தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம் – இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது,

ஏது :

அவன் அன்னியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

உதாரணம் :

மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்
கஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்-மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமாம் முன்பின் [illegible]கள் நெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார், கொள்பவத்தின்
குறைவில்சகன் சூழ்கொள்பவர்க்கு. [illegible]

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல்—இல்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா என்றது.

ஏது :

அவை தாம் பளிங்கிலிட்ட வன்னம் போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உதாரணம் :

பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யாமெய்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு. [கண்டான்

நாள்காம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே, தமது முதல் சீபாதத்தை யணையும் என்றது.

ஏது :

ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந் துணையான்.

உதாரணம் :

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளா
லைவில்அரன் பாதத்தை உற்று.

எவ்வுருவுந் தானென்னில் எய்துவார் இல்லைதான்
இவ்வுருவின் வேறேல் இறையல்லன்—எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணாஅக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்தச்சிவனை
ஐம்பொறியை விட்டங்கணைசதலன்—ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்கிமல கன்மம்
நீங்கானை நீங்கு நினைந்து.

ஒன்பதாம் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்ந்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும்ஞ் செழுத்தே.

கருத்துரை:

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின். ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள்:

ஈண்டு, அம்முதலை ஞானக் கண்ணினாற் காண்க என்றது.

ஏது:

அவன் வாக்குமனாதீத கோசரமாய் நிற்றலான்.

உதாரணம்:

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை — நாடிஅரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னா மெனவறிவார் இன்று.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா — காட்டிய
உள்ளந் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய
கள்வன்றான் உள்ளத்திற் காண்.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற்பாற்று.

உதாரணம் :

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் — அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றுனே
வானே முதல்சுளையின் வந்து.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண் — சுட்டி
உணர்ந்ததீ சத்தல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

கண்டதை அன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
ஆண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப் — பண்டனைந்த
ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனின் ஒண்கருட
சானத்தில் தீர்விடம்போல் தான்.

மூன்றும் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்விடத்து சீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

ஏது :

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாதலின், அது நீக்குதற்கெனக் கொள்க.

உதாரணம் :

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அற்சித் திதயத்தில் — அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனாஞ் சேடனாம் அங்கு.

இந்துவிற் பானுவிலி ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணா — முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆட்டானாம் ஓதஞ் செழுத்து.

மண்முதல் நாளமலர் வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமுன் — நண்ணிற்
கலையுருவாம் நாதமாஞ் சத்தி அதன் கண்ணாம்
நிலையதிலாம் அச்சிவன்தாள் நேர்.

4. பயனியல்

பத்தாம் சூத்திரம்

அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

~~கருத்துரை~~

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், பாசட்சயம் பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத் தேகனாகி நிற்க வென்றது.

ஏது :

அவ்வாறு நிற்கவே யான்என தென்னுஞ்செருக்கற்று அவனது சீபாதத்தை யணையுமாகலான்.

உதாரணம் ;

நானவனென் றெண்ணினர்க்கும் நாடுமுளம் உண்டாதல் தானெனஒன் றின்றியே தானதுவாய் – நானெனவொன் றில்லென்று தானே எனுமவரைத் தன்னடிவைத் தில்லென்று தானாம் இறை.

சர்ந : ம. 1,2

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனி இறைபணி வழுவாது நிற்க வென்றது,

ஏது :

அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே, அஞ்ஞானகன்மம் பிரவேசியாவாகலான்.

உதாரணம் :

நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமும் அரனுடைமை – யாமென்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியாக் கில்லைவினை,
முற்செய்வினை யுந்தருவான் முன்.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்ச் — சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் — பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே
ஆயஅத னால்உணரும் அச்சு அதனால்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர் மாச்செலுத்தும் பாகரினும் — எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அவர்திறல் நீங்கார் அதற்கு.

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக் — கதிமிக்
கெரிகதிரின் முன்னிருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார் சத்தணைவார் ஆங்கு.

பதினென்றும் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் ~~செலுமே.~~

கருத்துரை

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ எனின், பரமேசுரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்துதல் நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது,

ஏது :

இவ்வான்மாக்கள் அவனையின்றியமைந்தொன்றையும் விடயியாவாகலான்.

உதாரணம் :

ஐந்தையும் ஒக்க உணரா தவற்றுணர்வ
தைந்தையும்போல் நின்றுணரும் ஆகலான் — ஐந்தினையும்
ஒன்றொன்றுப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றுப் பார்க்கும் உணர்ந்து.

ஏகமாய் நின்றே யிணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன் — ஏகமாய்
உள்ளத்தின் கண்ணுளன் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணுனே உற்று.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனிப் பத்தியினான் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையுமென்றது.

ஏது :

அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்.

உதாரணம் :

அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன் — அருக்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோல்
நேசத்தி ~~ற்றன்னாணர்ந்தார் நேர்~~.

மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து — ~~தன்னின்~~
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்.

நசித்தொன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா
நசித்திலதேல் ஒன்றாவ தில்லை — நசித்துமலம்,
அப்பணைந்த உப்பின் உளமணைந்து சேடமாய்
கப்பின்றாம் ஈசன் கழல்.

பொன்வாளமுன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே எங்குமாந் தன்மைபோல் — முன்வாள்
மலத்தின் மறைந்துள்ளம் மற்றுலகை உண்ணும்
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

கருத்துரை

என்பது சூத்திரம். என்னுதலிற்றோ வெனின், அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமா றுணர்த்துதல் நுதலிற்று.

வார்த்திகப் பொழிப்பு

முதல் அதிகரணம்

மேற்கோள் :

ஈண்டு, ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது,

ஏது :

அவைதாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்து மாகலான்.

உதாரணம் :

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்
மண்முதல் மாயைதான் மாயையும் கண்ணிய
அஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமும் இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் :

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக என்றது.

ஏது :

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

உதாரணம் :

மிறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை — அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வினால் உணரும்
மெய்த்தவரை மேவா வினை. 12·2

மூன்றும் அதிகரணம்

மேற்கோள் :

இனிப்பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக வென்றது.

ஏது :

அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

உதாரணம் :

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால் — தன்னுணரும்
நேசத்தார் தம்பால் நிகழுந் ததிநெய்போல்
பாசத்தார்க் கின்றும் பதி. 12·3

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தில் அங்கிவே
றுண்டல்போல் நின்றங் குளதாமால் — கண்டஉருத்
தானதுவாய் அன்றுனன்றானதுவாய்த் தோன்றுனோ
தானதுவாய்க் காணுந் தவர்க்கு. 12·4

நான்காம் அதிகரணம்

மேற்கோள் :

இனி, இவ்விடங்களில் வழிபடுக என்றது,

ஏது :

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாதாவாறு அப்புருடனு மாகலான்.

உதாரணம் :

அதுஇது என்ற ததுவல்லான் கண்டார்க்
கதுஇது என்றதுவும் அல்லான் — பொதுவதனில்
அத்துவிதா மர்தல் அகண்டமுந் தைவமே
அத்துவிதி அன்பிற் றொழு.

வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா — வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஞானத்தால் அன்பின் தொழு.

தன்னை யறிவித்துத் தன்றானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது — முன்னவனே
தானேதா னாச்செய்தும் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

இந்நூற்கு அதிகாரிகள்

சிவமென்னும் அந்ததர சித்தைநேர் நோக்கப்
பிவமின்றாம் கண்வா சகத்திற் — சிவமுண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கிங் கொண்குருவால்
இன்றிந்நூல் மும்மை மலர்க்கு.

சிறப்புப் பாயிரம்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழுஇயல்பாய்
நந்தி யுரைத்தருளும் ஞானநூல் — சிந்தைசெய்து
தாமுரைத்தான் மெய்கண்டான் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

சிவஞானபோதம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றபலம்

சூர்ணிக் கொத்து

முதற் சூத்திரம்

1 – சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலை யுடையது.

2 – அது அரனாலே உடையது.

3 – மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள்.

இரண்டாம் சூத்திரம்

1 – அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

2 – உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

3 – உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.

4 – அரன் சருவ வியாபகன்.

மூன்றும் சூத்திரம்

1 – இல்லையென்கின்ற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

2 – எனது உடல் என்று பொருட்பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிருண்டு.

3 – ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேறாய் உயிர் உண்டு.

4 – கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையி ஞலே, அக் கனவுடற்கு வேருய் உயிர் உண்டு.

5 – நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண் ணவும் சரீரத்துக்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினுலே, பிராணவாயுவுக்கு வேருய் உயிர் உண்டு.

6 – மறந்து மறந்து நினைக்கிறபடியினுலே மறவா மல் இருக்கிற அரனுக்கு வேருய்உயிர் உண்டு.

7 – எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினுலே, அந்தந்தத் தத்து வங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

நான்காம் சூத்திரம்

1 – அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினுலன் றித் தொழில் இல்லாதபடியினுலே, அந்தக் கரணங்களுக்கு வேருய் உயிர் உண்டு.

2 – மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.

3 – உயிர் மூன்றவத்தைப்படும்.

ஐந்தாம் சூத்திரம்

1 – உயிராலே தத்துவங்களெல்லாம் தொழில் செய்யும்.

2 – அரனுலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆருஞ் சூத்திரம்

1 - உயிரறிவினுலே அறியப்பட்டவெல்லாம் அழியும்.

2 – அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாம் சூத்திரம்

1 – அரன் பாசத்தை அனுபவியான்.

2 – பாசம் அரனை அனுபவியாது.

3 – உயிர் அவ்விரண்டனையும் அனுபவிக்கும்.

எட்டாம் சூத்திரம்

1 – உயிருக்கு நல்லறிவு தவத்தினுலேயே வரும்.

2 – உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

3 – உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினுலே தன்னையும் அறியமாட்டாது.

4 – உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்ருல் தன்னையும் அறியும்.

ஒன்பதாம் சூத்திரம்

1 – உயிர் அரன் ஞானத்தினுலேயே அரனைக் காணும்.

2 – உயிர் பாசத்திலே பற்றற்ருல், அரன் வெளிப்படுவன்.

3 – பஞ்சாட்சரசெபம் பண்ணினுல், வாசனுமலம் போம்.

பத்தாம் சூத்திரம்

1 – அரனுடன் ஒன்றாகி நில்.

2 – உன் தொழிலெல்லாம் அரன் பணி என்றே கொள்.

பதினொராம் சூத்திரம்

1 – ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அனுபவிப்பன்.

2 – அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப் போவன்.

பன்னிரண்டாம் சூத்திரம்

1 – மும்மலங்களையுங் களைக.

2 – சிவஞானிகளுடனே கூடுக.

3 – சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

4 – வழிபடாமையை ஒழிக.

திருச்சிற்றம்பலம்.

E. Murugesu
25 Jalan Durian,
off 2 3/4 mile Ipoh Road,
Kuala Lumpur.
Malaysia.

[illegible]

[illegible]
[illegible]
-2354.

[illegible]

871

[illegible] 1961 (வ. 49)

[illegible]

DE1

14608

3569

27/1/71

[illegible]

அச்சுப்பதிவு:
ஸ்ரீ காந்தா அச்சகம்,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.